தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம்
TAMIL NADU OPEN UNIVERSITY
(Established Act No.27/2002 of the Government of Tamil Nadu)
Students Registration and Evaluation Division
577, Anna Salai, Saidapet, Chennai - 600 015
Ph. : (91- 44) 2430 6666
email :coe@tnou.ac.in website : www.tnou.ac.in

முனைவர் கே.எம். சுப்பிரமணியம்
பதிவாளர் (பொ.)

நாள்: 19.04.2018

# பத்திரிகைச் செய்தி

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வழங்கும் அனைத்து படிப்புகளுக்கும் 2020 வரை யு.ஜி.சி. அங்கீகாரம் வழங்கியுள்ளது

இந்திய அளவில் மரபார்ந்த பல்கலைக்கழகங்கள் (Regular Universities), திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள்(Open Universities) என இருவகைப்பட்ட பல்கலைக்கழகங்களும் தொலைநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்கி வருகின்றன. இப்பல்கலைக்கழகங்களை யுஜிசி இருவகைப் படுத்தியுள்ளது.

முதல் வகையில் இந்தியாவிலுள்ள அனைத்து திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களும் அடங்கும். இரண்டாம் வகையில் இந்தியாவில் தொலைநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்கும் மரபார்ந்த பல்கலைக்கழகங்கள் (Regular Universities) அனைத்தும் அடங்கும்.

தற்போது இரண்டாம் வகைப்பாட்டிலுள்ள மரபார்ந்த பல்கலைக்கழகங்கள் தொலைநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்க வேண்டுமெனில் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (NAAC) தரமதிப்பீடு பெற்றிருக்க வேண்டும் என யுஜிசி அறிவித்துள்ளது.

திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (NAAC) தர மதிப்பீட்டினைப் பெறுவதற்கான விதிமுறைகளை

உருவாக்கும் செயல்பாடுகள் தற்போதுதான் தொடங்கியுள்ளன. எனவே தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் கவுன்சிலின் (NAAC) தர மதிப்பீட்டினைப் பெற்றுள்ள பல்கலைக் கழகங்கள் மட்டுமே தொலைநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்க வேண்டும் என்ற யுஜிசி-யின் அறிவிப்பு தற்போதைய நிலையில் இந்தியாவிலுள்ள திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களுக்கு பொருந்தாது. குறிப்பாக, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு பொருந்தாது.

ஏனெனில், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (NAAC) தர மதிப்பீட்டினைப் பெறாமல் 2020-ஆம் ஆண்டு வரை தொலைநிலை மற்றும் திறந்தநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்குவதற்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு யுஜிசி அங்கீகாரம் அளித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தொலைநிலை மற்றும் திறந்தநிலைக் கல்வி முறையில் வழங்கும் சான்றிதழ், பட்டயம், பட்டம், முதுநிலைப் பட்டம் ஆகிய படிப்புகள் யுஜிசி-யின் அங்கீகாரம் பெற்றவையாகும்.

மேலும் நேரடி கல்வி முறையில் (Regular Mode) முழுநேரம் மற்றும் பகுதிநேர முறையில் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.), முனைவர் (Ph.D.) ஆகிய ஆய்வு படிப்புகளை வழங்குவதற்கும் யுஜிசி அங்கீகாரம் அளித்துள்ளது என்பதனையும் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

19/09/18

பதிவாளர் (பொ)

பதிவாளர்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
எண்.577, அண்ணா சாலை,
சைதாப்பேட்டை, சென்னை-600 015.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம்
TAMIL NADU OPEN UNIVERSITY
(Established Act No.27/2002 of the Government of Tamil Nadu)
Students Registration and Evaluation Division
577, Anna Salai, Saidapet, Chennai - 600 015
Ph. : (91- 44) 2430 6666
email : coe@tnou.ac.in website : www.tnou.ac.in

முனைவர் கே.எம். சுப்பிரமணியம்
பதிவாளர் (பொ.)

நாள்: 19.04.2018

## பத்திரிகைச் செய்தி

### தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில்
### எம்.ஃபில்., பிஎச்.டி., படிப்பிற்கு (ஜூலை 2018) மாணவர் சேர்க்கை

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (UGC) அனுமதியுடன் நேரடி முறையில் எம்.ஃபில்., பிஎச்.டி., முழுநேர, பகுதிநேர ஆய்வு படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி கீழ்க்காணும் பாடங்களில் ஆய்வு படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. UGC-யின் இளநிலை ஆய்வு உதவித் தொகை பெறுவதற்கானத் தகுதி பெற்ற (Junior Research Fellowship – JRF) மாணாக்கர்களும் இவ்வாய்வுப் படிப்புகளில் UGC-யின் நிதியுதவியுடன் ஆய்வு மேற்கொள்ளலாம்.

தமிழியல், ஆங்கிலம், நாடகம் மற்றும் அரங்க கலையியல், மேலாண்மை, இயற்பியல், வேதியியல், விலங்கியல், சமூகவியல், மின்னணு ஊடகவியல், கணினி அறிவியல், புவியியல், அரசியல் அறிவியல், குற்றவியல், வரலாறு மற்றும் சுற்றுலாவியல், தொல்லியல், உளவியல் மற்றும் கல்வியியல்.

விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்களைப் பல்கலைக்கழகத்தின் www.tnou.ac.in என்ற இணைய தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிக்க இறுதி நாள்: 18.05.2018

19/04/18
பதிவாளர் (பொ)

பதிவாளர்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
எண்.577, அண்ணா சாலை,
சைதாப்பேட்டை, சென்னை-600 015.